

பேராசிரியர் அவர்களின் சகோதரி திருமதி இராஜம் இராமதாஸ் அவர்கள் உடல் நலக்குறைவால் நேற்று (20.09.2024), மறைவுற்றார். இச்செய்தியறிந்து சென்னை, இராயப்பேட்டையிலுள்ள அவரது இல்லத்திற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேரில் சென்று அவரது உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார். உடன் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், பேராசிரியர் அவர்களின் மகன் அன்புச்செல்வன், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழு தலைவர் நே. சிற்றரசு மற்றும் பலர் உள்ளனர்.




மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (20.09.2024) சென்னை, ஓமந்தூரார், அரசினர் தோட்டத்தில் உள்ள தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனை வளாகத்தில் தமிழ்நாடு ஓமியோபதி மருத்துவக்கவுன்சில், தேசிய ஓமியோபதி ஆணையம் மற்றும் தேசிய சுகாதார ஆணையம் ஆகியவை இணைந்து தமிழ்நாட்டில் ஓமியோபதி மருத்துவர்கள் மற்றும் மருத்துவ மாணவர்களுக்கு துறை சார்ந்த பயிலரங்கத்தினை தொடங்கி வைத்து விழா பேருரையாற்றினார். இந்நிகழ்வில் சென்னை ஓமியோபதி மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.கார்த்திகேயன், தமிழ்நாடு ஓமியோபதி மருத்துவக்கவுன்சில் தலைவர் மரு.ஜெயக்குமார், சென்னை ஓமந்தூரார் தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனை இயக்குநர் மரு.மணி மற்றும் மருத்துவர்கள், மாணவர்கள் பலர் கலந்து கொண்டனர்

### இனமானப் பேராசிரியரின் அன்புச் சகோதரி

# திருமதி இராஜம் இராமதாஸ் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, செப். 21 -

இனமானப் பேராசிரியர் அவர்களின் அன்புச் சகோதரி இராஜம் இராமதாஸ் மறைவுக்கு முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:

**நம் நெஞ்சங்களில் நிறைந்து வாழும் இனமானப் பேராசிரியர் அவர்களின் அன்புச் சகோதரி திருமதி. இராஜம் இராமதாஸ் அவர்கள் இயற்கை எய்தினார் என்ற செய்தியறிந்து மிகவும் வருத்த முற்றேன்.**

**அவரது மறைவிற்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது பிரிவால் வாடும் அவரது மகன் மருத்துவர் குணாளன் உள்ளிட்ட அவரது குடும்பத்தினருக்கும், உறவினர்கள், நண்பர்கள் என அனைவருக்கும் எனது ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

### காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட

# கழக அணிகளின் மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் ஆலோசனை கூட்டம்!

## மாவட்ட செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு!



காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.கழக அணிகளின் மாவட்ட அமைப்பாளர் – துணை அமைப்பாளர்கள் ஆலோசனை கூட்டம் நாளை 22.9.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் கத்திப்பாரா மேம்பாலம் அருகில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் எனது (தா. மோ.அன்பரசன்) தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.கழக மகளிர் அணி,மகளிர் தொண்டர் அணி, வழக்கறிஞர் அணி, இலக்கிய அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, நெசவாளர் அணி, மீனவர் அணி, பொறியாளர் அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, வர்த்தகர் அணி, சிறுபான்மையினர் பிரிவு, தொண்டர் அணி,தகவல் தொழில்நுட்ப அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, மருத்தவ அணி, மீனவர் அணி, தொழிலாளர் அணி, அமைப்புச்சாரா ஓட்டுனர் அணி உள்ளிட்ட கழக அணிகளின் மாவட்ட அமைப்பாளர் – துணை அமைப்பாளர்கள் அனைவரும் இதனையே அழைப்பாக ஏற்று தவறாமல் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: வருகிற செப்.28 அன்று காஞ்சிபுரத்தில் தி.மு.க. கூட்டணி கட்சித் தலைவர்கள் பங்கேற்கும் கழக பவள விழாவில் பங்கேற்பது சம்மந்தமாக. கழக ஆக்கப் பணிகள்.

**அமைச்சர் தா.மோ.அன்பரசன்**
செயலாளர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க.

# மகளிர் சுய உதவிக்குழுக்கள் தயாரிக்கும் நவராத்திரி விற்பனைக் கண்காட்சி!

*சென்னை, செப்.21-*

*நவராத்திரியை முன்னிட்டு. சென்னை, நுங்கம்பாக்கம் அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களின் நவராத்திரி விற்பனைக் கண்காட்சியினை ககன்தீப் சிங் பேடி (கூடுதல் தலைமைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை) இன்று (21.09.2024) காலை 09.00 மணிக்கு திறந்து வைக்கவுள்ளார்.*

*21.09.2024 முதல் 06.10.2024 வரை காலை நடைபெறும் இக்கண்காட்சியில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம், வாழ்ந்து காட்டுவோம் திட்டம் ஆகியவற்றின் வழிகாட்டுதலில் செயல்படும் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்களான நவராத்திரி கொலு பொம்மைகள். பட்டு, பருத்தி ஆடைகள், மண்பாண்டப் பொருட்கள். செயற்கை ஆபரணங்கள், பல்வேறு உலோகங்களால் உற்பத்தி செய்யப்படும் கைவினைப் பொருட்கள், தரமான வீட்டு உபயோகப் பொருட்கள், சணல், காகிதம், பனை ஓலை மற்றும் வாழை நார் ஆகியவற்றால் தயாரிக்கப்பட்ட பொருட்கள், பல்வேறு தோல் பொருட்கள், வாசனைப் பொருட்கள், மரச் சிற்பங்கள், சுடுமண் சிற்பங்கள், மூலிகைப் பொருட்கள் விற்பனை செய்திடவும், பாரம்பரிய கிராமிய உணவு வகைகளை விற்பனை செய்யும் அரங்குகளும் அமைக்கப்பட்டுள்ளன.*

### காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக்கழக இளைஞர் அணி – மாணவர் அணி

# ஒன்றிய - நகர -பகுதி - பேரூர்அமைப்பாளர்கள் -துணை அமைப்பாளர்கள் ஆலோசனை கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் நடைபெறுகிறது!

*காஞ்சிபுரம்,செப்.21-*

*காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக்கழக இளைஞர் அணி - மாணவர் அணிஒன்றிய - நகர -பகுதி - பேரூர் கழகஅமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள் கலந்தாலோசனைக் கூட்டம் நாளை22-ஆம் தேதி காலை 10.00 மணியளவில் நடைபெறுகிறது என்று மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள்கோல் டுடி.பிரகாஷ்- மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர்எல்.பிரபு ஆகியோர் இணைந்து அறிவித்து உள்ளனர்.*


*இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:- காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக்கழக இளைஞர் அணி மற்றும்மாணவர்அணிஒன்றிய - நகர-பகுதி - பேரூர்கழக அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள் கலந்தாலோசனைக்கூட்டம் நாளை 22.09.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் ஆலந்தூர் கத்திப்பாரா ஜோதி திரையரங்கம்அருகில் அமைந்துள்ள மாவட்டக்கழக அலுவலகத்தில்மாவட்ட செயலாளர்- அமைச்சர் தா.மோ.அன்பரசன் அவர்களின் தலைமையிலும், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் தையூர் வீ.விஜயகுமார், ப.இராமமூர்த்தி, டி.கே. கமலகண்ணன், கே.மணிகண்டன், கோ.ஜானகிராமன்மற்றும் மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் கலாநிதி, விக்கி(எ) விக்னேஸ்வரன்,வே.சங்கீதா, எஸ்.ஜெகதீப்மற்றும்தே. ஜெகன்ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.*

*அதுபோதுகாஞ்சி வடக்கு மாவட்டக்கழக இளைஞர் அணி - மாணவர் அணி ஒன்றிய - நகர - பேரூர்கழகஅமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள் அனைவரும் இதனையேஅழைப்பாக ஏற்று இக்கூட்டத்தில் தவறாமல் கலந்துக்கொண்டுசிறப்பிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.*

*வருகிற 28-ஆம் தேதி காஞ்சிபுரம் தி.மு.க. கூட்டணி கட்சித் தலைவர்கள் பங்கேற்கும் தி. மு.கழகபவளவிழா மாபெரும் பொதுக்கூட்டத்தில் இளைஞர் அணியினரும்- மாணவர் அணியினரும் பெரும் திரளாக பங்கேற்பது சம்பந்தமாக ஆலோசிக்கப்படஉள்ளது.*

*இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.*

# தமிழ் நாம்! தமிழர் நாம்!







தமிழ்நாம்! தமிழர்நாம்!
தலைநி மிர்ந்த இனம்நாம்!
அறிவுநாம்! ஆற்றல்நாம்!
திறப்புநாம்! புதுமை நாம்!
நெறியில் புகழை
நிறுத்திவைத்த மரபுநாம்
பிறப்பின் இறப்பின்
பெருமை நாம்! நாம்!
மெய்யிது ஆம்! ஆம்! ஆம்!

தந்தன தந்தன
தந்தனப் பாட்டுப் பாடி
வெந்ததைத் தின்பது
விதிவந்து சாவது
கந்தை வாழ்வெனும்
கதையினை மாற்று!
சிந்தையில் சூரியத்

தீப்பந்தம் ஏற்று! நீ
புதுமையின் ஒளியூற்று!

குறள்நாம்! சிலம்புநாம்!
குறையிலா மணிமே கலைநாம்!
சிந்தை புதிது
தெரிந்து செய்த
தந்தை பெரியார்
தடமும்நாம்! அண்ணா
தந்த நடையும்நாம்!
கலைஞர் தயாரித்த
படையும் நாம்! நாம்! நாம்!



கவிப்பேரருவி
**ஈரோடு தமிழன்பன்**

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## சேடப்பட்டி இரா. முத்தையா

**செப்டம்பர் 21 (2022)**



**திராவிடக் கொள்கையில் தீவிர பற்றுக் கொண்ட இவர், தனது மாணவப் பருவத்திலேயே கழகக் கொள்கையினால் ஈர்க்கப்பட்டு, கழகத்தில் இணைந்து தீவிர கழகப் பணியாற்றினார்.**

**மதுரையில் 1965ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**நான்குமுறை சட்டமன்ற உறுப்பினராகவும், இரண்டு முறை நாடாளுமன்ற உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு மக்கள் பணியாற்றி, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர். அத்துடன் – தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவராகவும், ஒன்றிய அமைச்சராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஆவடி திருமுல்லைவாயில் சத்தியமூர்த்தி நகர் எட்டியம்மன் நகர் பகுதியில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் தமிழ்நாடு கல்வித்துறை சார்பில் விலையில்லா மிதிவண்டி வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது இதில் முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழகச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர்எம். எல்.ஏ 739 மாணவ மாணவிகளுக்கு மிதிவண்டிகளை வழங்கி சிறப்புரை ஆற்றினார். இந்நிகழ்ச்சியில் ஆவடி மாநகராட்சி மேயர் உதயகுமார் மாவட்ட கல்வி அலுவலர் கஸ்தூரி, மாவட்ட பொருளாளர் பா.நரேஷ் குமார் ஒன்றிய கழகச் செயலாளர் ப.ச.கமலேஷ் நகர்மன்ற உறுப்பினர்கள் ஜெயப்ரியா சரவணன் துளசிசிங்கம்சக்திவேல், தலைமை ஆசிரியர்கள் செந்தில்குமார், கலியபெருமாள் , தனலட்சுமி வார்டு செயலாளர் ராஜி உள்பட பெற்றோர் ஆசிரியர் கழகம் நிர்வாகிகள் ஆசிரியர்கள் திமுக நிர்வாகிகள் மாணவ மாணவிகள் உள்ளனர்.



திருத்தணி சட்டமன்ற தொகுதிகுட்பட்ட பள்ளிப்பட்டு சி.ஆர்.பட்டடை, கொடிவசா ஆகிய பகுதிகளில் கூட்டுறவுத் துறை சார்பில் வேளாண்மை உள்கட்டமைப்பு நிதி திட்டத்தின் கீழ் நபார்டு வங்கி மூலம் கடன் உதவி பெற்று ரூ. 23.77 லட்சம் வீதம் 2000 லிட்டர் பால் சேமித்து குளிரூட்டும் மையங்களை மாவட்டச் செயலாளர் திருத்தணி சட்ட மன்ற உறுப்பினருமான திருத்தணி எஸ்.சந்திரன் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். உடன் ஒன்றிய திமுக செயலாளர்கள் சி.ஜெ.சீனிவாசன், பி.டி.சந்திரன், முன்னாள் ஒன்றிய செயலாளர்கள் பி. ரவீந்திரநாத், திருமலை லோகநாதன், பள்ளிப்பட்டு பேரூராட்சி தலைவர் மனிமேகலை, பேரூர் செயலாளர் சி.ஜெ.செந்தில்குமார், மாணவர் அணி மாவட்ட அமைப்பாளர் முரளிசேனா, கூட்டுறவு சங்க செயலாளர்கள் உட்பட பலர் கலந்துக் கொண்டனர்.

### தாம்பரம் மாநகராட்சி பம்மல் பகுதியில்

# ரூபாய் 6.67 கோடியில் சாலைகள் அமைக்கும் பணி - இ.கருணாநிதி எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்!

## மண்டல குழு தலைவர் வே.கருணாநிதி பங்கேற்பு!

*தாம்பரம், செப்.21-*

*தாம்பரம் மாநகராட்சி பல்லாவரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மண்டலம்1 பம்மல் பகுதியில் தற்போது பாதாளக் சாக்கடை பணிகள் நடைபெற்று வருகின்றன.*

*இதனால் சாலைகள் பழுதடைந்து மக்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளானார்கள். மக்களின் கோரிக்கையை ஏற்று உடனடியாக சாலைகள் அமைக்க டூரிப் திட்டத்தின் மூலம் புதிய சிமெண்ட் மற்றும் தார் சாலைகளுக்கு ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டது. அதன் தொடர்ச்சியாக நேற்று பம்மல் பகுதியில் புதிய சாலைகள் அமைக்கும் பணி துவக்கப்பட்டது.*

*பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி பம்மல் பகுதியில் நேரில் வருகை தந்து புதிய சாலைகள் அமைக்கும் பணியை துவக்கி வைத்தார்.*

*அப்போது அங்கு இருந்த மாநகராட்சி அதிகாரிகளிடம் பாதாளச் சாக்கடை பணிகளுக்காக மிக ஆழமான குழி தோண்டப்பட்டுள்ளது. அதனால் ஒப்பந்ததாரர்களிடம் தரமான சாலைகளாகவும் காலம் கடத்தாமல் நல்ல முறையில் அமைத்துத் தருமாறும் கேட்டுக் கொண்டார்.*

*அப்பொழுது அங்கு இருந்த பொதுமக்களிடம் சட்டமன்ற உறுப்பினர் உடனடியாக சாலைகளை அமைக்கும் பணிகளை துவங்கப்படும், மிக விரைவில் தரமான சாலைகள் உங்களுக்கு அமைத்துத் தரப்படும் என்றும் தெரிவித்தார்.*

*இந்நிகழ்ச்சியில் மண்டலத் தலைவர் வே.கருணாநிதி, மாமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி பொறியாளர்கள், அதிகாரிகள் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர்.*